விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 088 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 03 சனிக்கிழமை (16.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ‘வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து’
## வழிபாட்டு உரிமையை தடுக்காதே!

### கைதானவர்களை விடுவிக்கக்கோரி
### நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்





(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

(03ஆம் பக்கம் பார்க்க)

### நவக்கிரியில் மோ.சைக்கிள் தீயிட்டு எரிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் வீடொன்றில் நிறுத்தி வைக்

15

### வட்டுக்கோட்டை படுகொலை
### கடற்படையினரிடம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகாமையில், அண்மையில் தம்பதியர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தின்போது, கடற்படையினர் நடந்து

15

வெடுக்குநாறி விடயத்தில் ஏன் மௌனம்

### மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம்
### பாதிக்கப்பட்டவர்களின் உறவுகளால் முற்றுகை



(வவுனியா)

வெடுக்குநாறி விடயத்தில் மனித உரிமை ஆணைக்குழு மௌனம் காப்பதாக தெரிவித்து வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களின்

15

யாழ்.நகருக்கு அண்மையாக

### கூரிய ஆயுதங்களுடன் 5 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக நேற்று அதிகாலை கூரிய ஆயுதங்களுடன் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக நேற்று அதிகாலை 2 மணியளவில் முச்சக்கரவண்டியில் பயணித்த 5 பேர், விசேட

15

வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

### முயற்சியாளர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை

யாழில் அமெரிக்கப் பிரதிநிதி



(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளூர் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களை மேலும் அதிகரிப்பதற்கு அமெரிக்க அரசாங்

15

### வெடுக்குநாறி அநீதிக்கு எதிராக வவுனியாவில் இன்று போராட்டம்

அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு

(வவுனியா)

வெடுக்குநாறி மலையில் இடம்பெற்ற அநீதிக்கு எதிராக வவுனியாவில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்ட அநீதிக்கு எதிராக இன்று காலை 10 மணிக்கு வவுனியா

15

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தக்கோரி

### யாழ்.இந்திய துணைத் தூதரகம் முன் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம்

கடற்றொழில் சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியமீனவர்களின் அத்துமீறிய கடற்றொழிலை கட்டுப்படுத்துமாறு கோரி யாழ். இந்திய துணை தூதரகத்துக்கு முன் கடற்றொழில் சங்கங்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின்

02

வெடுக்குநாறி சம்பவத்துக்கு நீதிகோரி

### யாழிலிருந்து வவுனியா நோக்கி இன்று வாகனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரி இன்று காலை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், “அனைவருக்காகவும் இன்று8 அப்பாவி

16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை

திருமதி. **மறினா கொன்றாட் கொலீந்திரன்**

**முதுகல்விமாணி** (MEd)

16.03.2024 இன்று யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (MEd) பட்டத்தை பெறவுள்ளமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்களைப் பெற வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : **அதிபர், ஆசிரியர்கள்**
**யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை**

Congratulations

(096)

# மெய்வல்லுநர் போட்டி

(கொக்குவில்) யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி-(2024) யானது இன்று சனிக் கிழமை காலை 08.30 மணி முதல் அருமைத்துரை மைதானத்தில் கல் லூரியின் அதிபர் செல்வி கனகசபை புண்ணியவதி தலைமையில் இடம் பெறவுள்ளது.

(ம-7)

# கேள்வி அறிவித்தல் திருத்தம்

15.03.2024 அன்று வலம்புரிப் பத்திரிகையில் 2 ஆம் பக்கத்தில் பிரசுரமான சாவகச்சேரி பிரதேச சபை கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் 6 ஆவது பந்தியில் உள்ள 05.04.2024 ஆம் திகதி மாலை 10.00 மணி என்பதை காலை 10.00 மணி எனத் திருத்தி வாசிக்கவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேச சபை,**
**A9 வீதி, கொடிகாமம்.**

(C-8532)

# கேள்வி அறிவித்தல்
# சபைநிதி வேலைத்திட்டம் - 2024
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராக இருத்தல் வேண்டும். அட்டவணை ஒன்றில் குறிப்பிடப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில்(CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் **021 225 6651**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 16.03.2024ந் திகதியிலிருந்து 01.04.2024ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 02.04.2024ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூல மாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.03.25ந் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.
10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | சோதிவேம்படி கிளை வீதி புனரமைப்பு, மானிப்பாய் தெற்கு NP/14/41(16)/W/CF/2024/01 | 2.79மி. | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 27,900.00 | 01.07.2024 |
| 02 | கல்லூரி வீதி புனரமைப்பு, மானிப்பாய் NP/14/41(16)/W/CF/2024/02 | 3.17மி. | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 31,700.00 | 01.07.2024 |
| 03 | i) காக்கைதீவு 1ம் ஒழுங்கை புனரமைப்பு ii)நாச்சிமார் தெற்கு வீதி புனரமைப்பு,நவாலி வடக்கு NP/14/41(16)/W/CF/2024/03 | 3.27மி | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 32,700.00 | 01.07.2024 |
| 04 | i) நாச்சிமார்கோவில் வீதி புனரமைப்பு சண்டிலிப்பாய் கிழக்கு ii)சங்கம்புலவு வீதி புனரமைப்பு,சண்டிலிப்பாய் மத்தி NP/14/41(16)/W/CF/2024/04 | 2.26மி | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 22,600.00 | 01.07.2024 |
| 05 | பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பின் வீதி புனரமைப்பு,வடலியடைப்பு NP/14/41(16)/W/CF/2024/05 | 2.35மி | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 23,500.00 | 01.07.2024 |
| 07 | மாகியப்பிட்டி சந்தை திருத்தவேலை NP/14/41(16)/W/CF/2024/06 | 0.89மி | 45 நாட்கள் | C8 and C9 (கட்டடம்) | 49 நாட்கள | 8,900.00 | 17.06.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்.**

(C-8537)

**16.03.2024**

## யாழ். இந்திய...

சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எமது யாழ்ப்பாண மாவட்ட கடற்பரப்பில் இந்திய அத்து மீறிய கடற்றொழிலாளர்களின் வருகை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

அவர்கள் எமது வாழ்வாதாரத்தையும் தொழிலையும் தொடர்ச்சியாக அழித்து வரும் நிலையில் இலங்கை அரசாங்கத்திடமும் இந்திய அரசாங்கத்திடமும் எமது ஆதங்கங்களை வெளிப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை.

அண்மையில் இந்திய சட்டவிரோத கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்துமாறு கோரி இலங்கை கடல் எல்லையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினோம் யாழ்ப்பாண இந்திய துணை தூதரகத்திடம் மனுகையளித்தோம் பயன் ஏதும் ஏற்பட வில்லை.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை துாதரகத்திற்கு முன்னாள் தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளோம்.

எமது போராட்டத்திற்கு ஏனைய மாவட்டங்களைச் சார்ந்த சங்கங்கள் சமாசங்கள் மற்றும் சம்மேளனங்கள் தமது ஆதரவினை வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

**லங்கா மஹால்(PVT) LTD**
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 990/=
பிரான்ஸ் - 1890/=
ஜேர்மனி - 1790/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2090/=
இந்தியா - 990/=
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(101)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வெடுக்குநாறி எங்கள் சொத்து’

# கைதானவர்களை விடுவிக்கக்கோரி

## நெடுங்கேணியில் கண்டனப் போராட்டம்




**(குருமன்காடு)**

**வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்கக்கோரியும், பொலிஸாரின் அராஜகத்தை கண்டித்தும் வவுனியா, நெடுங்கேணியில் ஆர்ப்பாட்டம் பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

நெடுங்கேணி நகர சந்தியில் ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி, நெடுங்கேணி - புளியங்குளம் வீதி ஊடாக சென்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் வாயிலில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், உதவிப் பிரதேச செயலாளரிடம் கண்டன மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரார்கள் வனவளத் திணைக்கள அலுவலக வாயிலில் நின்று வனவளத் திணைக்களத்திற்கு எதிராக கோச ஸ்ரீங்களை எழுப்பியதுடன் பின்னர் அங்கிருந்து சென்று நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.





இதன்போது அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் “ பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறி எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையை தடுக்காதே, சிவ வழிபாட்டை தடை செய்யாதே, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், பொய் வழக்கு போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டது. கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-250)

## பகிரங்க ஏலவிற்பனை-2024
## பருத்தித்துறை பிரதேச சபை-புலோலி

பருத்தித்துறை பிரதேசசபையின் ஆணைவிழுந்தான் வாகத் தரிப்பிடத்தில் அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் பகிரங்க ஏலத்தில் பின்வரும் திகதி விபரப்படி விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலவிற்பனையில் பொருட்கள் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மேற்குறித்த இடத்தில் ஏலவிற்பனை நடைபெறவுள்ள குறித்த நாளில் மு.ப 9.00 மணி முதல் மு.ப 10.00 மணி வரை ஏலவிற்பனைப்பொருட்களை பார்வையிடலாம். ஏலவிற்பனைப் பொருட்களை பெறுகின்றவர்கள் உடனடியாக பணத்தை செலுத்தி பற்றுச் சீட்டை பெற்று அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

ஏலவிற்பனை திகதி : 26.03.2024 செவ்வாய் கிழமை மு.ப 10.00 மணி

இடம் :ஆணைவிழுந்தான் வாகனத்தரிப்பிடம்
பருத்தித்துறை பிரதேச சபை.

| இல | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Plastic Chair | 1 |
| 2 | GI Box Bar 02”x01” | 170 feet |
| 3 | GI Box Bar 03”x01,1/2” | 72 feet |
| 4 | GI Pipe 03” | 07”-03” |
| 5 | Roofing Sheet 08” | 24 |
| 6 | Ridge Sheet | 24 feet |
| 7 | Ridge Sheet | 10 feet |
| 8 | Tyre 12.4/11 – 28 | 4 |
| 9 | Tyre 215-75R-15 | 4 |
| 10 | Tyre 6.00 – 16 | 4 |
| 11 | Water Tank | 3 |
| 12 | Almarah Wooden | 1 |
| 13 | Chavel | 1 |
| 14 | Name Board Office | 1 |

**அ.வினோராஜ்- செயலாளர்.**

(சி-8535)

## 66 ஏக்கரில் சிறுபோகச் செய்கை


(அக்கராயன்)

முல்லைத்தீவு கொல்லவிளாங்குளம் கிராமத்தில் 66 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான கூட்டம் நடைபெற்று முடிந்து தற்போது சிறுபோக நெற்செய்கை நிலப் பண்படுத்தலில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். 180 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் விவசாயத்தினை நம்பியே குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். (5-6-350)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரியரும்,
ஆன்மீகப் பிரசாரகரும், இளஞ் சைவப் புலவருமான
எமது பாடசாலையின் ஆசிரியை

திருமதி.**சிவப்பிரியா ராஜ்குமார்**



2022/23 சைவ சித்தாந்த முதுமாணிக் கற்கைநெறியினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு சிறப்புத் தேர்ச்சியடைந்து(1st class) 2024.03.16 சனிக்கிழமை முதுமாணிப்பட்டம்(MA) பெறுவதனையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


அதிபர், ஆசிரியர்கள்
...வில் சி.சி.த.க பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஆவது இந்துக்களின் போர்

# ‘சூறைக்காற்றென’ சுபர்ணன், ஹரிகரன் ‘சுக்குநூறான’ கொழும்பு இந்துக் கல்லூரி

## யாழ்.இந்துவின் மைந்தர்கள் வலுவான முன்னிலை



சுபர்ணன், ஹரிகரன் ஆகியோரின் அபார பந்துவீச்சு மூலம் கொழும்பு இந்துக் கல்லூரியை 80 ஓட்டங்களுக்கு சுருட்டிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரிஷித், பரிமிகன், பவனன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் 70 ஓட்டங்கள் முன்னிலை பெற்று ஸ்திரமான நிலையில் உள்ளது.

"இந்துக்களின் போர்" என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 13ஆவது பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொழும்பு இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி, களமிறங்கிய அந்த அணிக்கு சிறீ நிதுஷன், தி.யாதவ் ஆகியோர் ஆரம்பம் வழங்கினர்.

இருவரும் நிதானமாக ஆட்டத்தைக் கடைப்பிடித்தமையால் ஓட்ட எண்ணிக்கை மந்தகதியில் அதிகரித்தது.

இந்நிலையில் 11ஆவது ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 12ஐ எட்டியபோது நிதுஷன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த தாருண்யன் நிதானம் காட்டினார்.

எனினும் யாதவ் 8 ஓட்டங்களுடன் (45 பந்துகளில்) ஆட்டமிழந்தார். அடுத்துவந்த மிதுஷிகன் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழக்கவே, 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள் எனத் தடுமாறத் தொடங்கியது கொழும்பு இந்துக் கல்லூரி.

பின்னர் வந்த வீரர்கள் தடுப்பாட்ட முறைமையை கடைப்பிடித்தனர். ஆனாலும் யாழ்.இந்துவின் பந்துவீச்சாளர்கள் அவர்களை நிலைக்க விடவில்லை.

55.1 ஓவர்கள் தாக்குப் பிடித்த கொழும்பு இந்துக் கல்லூரி அணியால் வெறும் 80 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.


துடுப்பாட்டத்தில் கொழும்பு இந்துக் கல்லூரி அணி சார்பில் அபிஷேக் 14, நிதுஷன் 12, டிலோஜன் 11, யசுர்யன் 5 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பில் சுபர்ணன், ஹரிகரன் ஆகியோர் தலா 3, சாருஜன் 2, தரணீசன், பரத்துவாசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கொய்தனர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்கள் கொழும்பு இந்துக் கல்லூரியின் பந்துவீச்சை அநாயசமாக எதிர்கொண்டனர்.

பரிஷித், பவனன் வழங்கிய ஆரம்பம் இணைப்பாட்டம் அணியின் ஓட்டக் குவிப்பக்கு வலுச் சேர்த்தது.

பரிஷித் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவிக்க, பவனன் நிதானமாக ஆடி பரிஷித்துக்கு ஒத்துழைப்புக் கொடுத்தார்.



பரிஷித் 60 பந்துகளை எதிர்கொண்டு 9 பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பிரியந்தன் பவனனுடன் இணைந்து நிதானம் காட்டினார். அணி 91 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 60 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த பவனன் ஆட்டமிழந்தார்.

பிரியந்தனுடன் இணைந்த பிரிமிகன் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்குவர யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 42 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பிரிமிகன் 5 பவுண்டரிகளுடன் 38 ஓட்டங்களையும் தரணீசன் 5 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் கொழும்பு இந்துக் கல்லூரி அணி சார்பில் பந்துவீசிய அபிஷேக் 2 விக்கெட்களையும் சிறீ நிதுஷன், தேஷ்கர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் இரண்டாம் நாளாட்டம் இன்றாகும். (ம-7)




## சென்னை அணியின் வலைப்பந்து வீச்சாளராக சென்.ஜோன்ஸ் மாணவன்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வலைபந்துவீச்சாளராக யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியின் 17 வயதுடைய வலதுகை வேகப்பந்துவீச்சாளர் குகதாஸ் மாதுலன் இணைந்து கொண்டுள்ளார்.

ஒரு வாரத்திற்கு முன்னர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 117ஆவது வடக்கின் சமர் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் சார்பாக பந்துவீசிய மாதுலன், எதிரணி வீரர் தகுதாஸ் அபிலாஷை இரண்டாவது இன்னிங்ஸில் யோக்கர் பந்தின் மூலம் ஆட்டம் இழக்கச் செய்திருந்தார்.

அவரது பந்துவீச்சுப் பாணி லசித் மாலிங்கவின் பந்துவீச்சை ஒத்ததாக இருந்ததுடன் அவர் வீசிய யோக்கர் பந்து சமூக ஊடகங்களில் பரவியது.

இதனையடுத்து இளம் வீரர் குகதாஸ் மாதுலனின் பந்துவீச்சை பார்க்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் எம்.எஸ்.தோனி விரும்பியதாக செய்தி வெளியாகியது.

இந்நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் உரிமையாளர்களால் குகதாஸ் மாதுலன் அழைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

தற்போது சென்னையில் இருக்கும் குகதாஸ் மாதுலனின் பந்துவீச்சை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்றுநர் குழாம் அவதானித்து வருவதுடன் அவருக்கு தேவையான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருவதாக அறியக் கிடைக்கிறது (5-6,33)

## குருநகர் பாடுமீன் அணி வெற்றி



சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி குருநகர் பாடுமீன் அணி வெற்றி பெற்றது .

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலைய முன்னாள் தலைவர் அமரர் எஸ்.கே.சண்முகலிங்கம் ஞாபகார்த்தமாக அரியாலை சனசமுக நிலையம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட [illegible] மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த திங்கட்கிழமை அன்று அரியாலை ஐக்கிய கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் குருநகர் பாடுமீன் அணியை ஏதிர்த்து சிவானந்தா விளையாட்டு கழக அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் குருநகர் பாடுமீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5-6,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயாசிறி தலைமையில் உருவாகும் புதிய கூட்டணி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையில் புதிய கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மனிதநேய மக்கள் கூட்டணி என பெயரிடப்பட்டுள்ள இது எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு லக்ஷ்மன் கதிரகாமர் சர்வதேச மையத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கிட்டத்தட்ட 40 சிவில் அமைப்புகள் புதிய கூட்டணிக்கு ஆதரவளிக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசியத் தேர்தலில் மனிதநேய மக்கள் கூட்டணியின் தலைவர் தயாசிறி ஜயசேகர ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவார் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (5-6)

# வெற்றிலைக்கேணியில்
## சட்டவிரோத மீன்பிடி-ஒருவர் கைது

(கரணவாய்)

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் வெற்றிலைக்கேணி கடற்படையினரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையை கடற்படையினர் முன்னெடுத்த வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஒளிபாய்ச்சி மீன் பிடித்த குற்றச்சாட்டிலே குறித்த மீனவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார். (5-6-60)

# நூற்றாண்டு விழா

(கரணவாய்)

யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய நூற்றாண்டு விழா பாடசாலை திறந்தவெளி அரங்கில்நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இந் நிகழ்வு தொடர்ந்து இன்று மற்றும் நாளையும் நடைபெறவுள்ளது. இரண்டாம் நாள் நிகழ்வு இன்று முற்பகல் 9 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் அதிபர் பரமலிங்கம் சுந்தரபாகு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளதுடன் மாணவர் பரிசளிப்பு, முத்திரை வெளியீடு மற்றும் மாணவர் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

3 ஆம் நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வடமராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் கலந்துகொள்ளவுள்ளார். அன்றைய தினம் நூற்றாண்டு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.(5-6-60)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 212, மூளாய் வீதி, வட்டாரம் - 10

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -10, மூளாய் வீதியிலுள்ள இல. 212 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சின்னப்பு நாகமுத்து என்றே காணப்படுகிறது.

பெயர்மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை சின்னப்பு நாகமுத்து கைம்பெண் நாகம்மா (முதலாம் பகுதி). கந்தையா நாகராசாவும் கந்தையா நாகச்செல்வமும் (இரண்டாம் பகுதி) ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4350/29.07.1971 ஆம் இலக்க பிரிவிடல் உறுதியால் பிரிவிடல் செய்து தத்தம் பகுதிகளுக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

முத்துலிங்கம் கைம்பெண் யோகேஸ்வரியும் வயித்திலிங்கம் மகள் நாகரத்தினமும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4351/29.07.1971 ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னப்பு நாகமுத்து கைம்பெண் நாகம்மா ஆகியவரிடமிருந்து பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சின்னத்தம்பி இராசதுரை மகள் மகேஸ்வரி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.குணரத்தினம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 805/22.08.1975 ஆம் இலக்க உறுதியால் குறித்த கார்த்திகேசு செல்வரத்தினமும் பெண் நாகேஸ்வரியும் நாகமுத்து வயித்திலிங்கம் மகள் நாகரத்தினமும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சுப்பிரமணியம் சக்திவடிவேலும் பெண் திலகவதியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மீ.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 609/12.02.1990 ஆம் இலக்க நிபந்தனை உறுதியால் குறித்த சின்னத்தம்பி இராசதுரை மகள் மகேஸ்வரி மறுபெயர் துரைராஜா பெண் மகேஸ்வரி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரான்ார்.

தனநாயகம் கைம்பெண் மகேஸ்வரி திருமணத்திற்கு முன் இராசதுரை ஆகியவர் குறித்த ஆதனமானது குறித்த 609 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியினால் குறித்த உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக சுப்பிரமணியம் சக்திவடிவேலுவுக்கும் பெண் திலகவதிக்கும் நிபந்தனையாக கட்டுப்படுத்தப்பட்டிருந்தது எனவும் குறித்த உறுதியில் குறிப்பிடப்பட்ட முதலும் இணங்கிக் கொள்ளப்பட்ட வட்டியும் குறித்த சுப்பிரமணியம் சக்திவடிவேலுவுக்கும் பெண் திலகவதிக்கும் மீள வழங்கப்பட்ட போதிலும் அக்காலத்தில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் மீளவும் தனது பெயருக்கு அறுதி உறுதி சாதனம் ஒன்றினை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை எனவும் குறித்த சுப்பிரமணியம் சக்திவடிவேலினையோ பெண் திலகவதியினையோ அல்லது அவர்களின் உரித்தாளர்களையோ கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் குறித்த நிபந்தனை அறுதி உறுதியின் மீது இணங்கிக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் காலவதி (திருத்தங்களுடன்) சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் காலாவதியானவை என்றும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு பு.றெக்னோ முகதாவில் 198/07.12.2021 ஆம் இலக்கத்தில் பிரகடனப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

பிரதீபா குகதாஸ் பிரபதி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பு.றெக்னோ முகதாவில் நிறைவேற்றப்பட்ட 218/18.03.2022 ஆம் இலக்க உறுதியால் குறித்த தனநாயகம் கைம்பெண் மகேஸ்வரி திருமணத்திற்கு முன் இராசதுரை ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பிரதீபா குகதாஸ் பிரபதி ஆகியவர் குறித்த 805 ஆம் இலக்க உறுதியில் அறுதி விற்பவர்களில் இரண்டாம் பெயர்வழிகாரரின் யோகேஸ்வரி எனும் பெயர் தவறுதலாக கார்த்திகேசு செல்வரத்தினம் பெண் நாகேஸ்வரி என பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த பிழையினை திருத்தி திருத்தல் உறுதியொன்றினை நிறைவேற்ற குறித்த உறுதி நிறைவேற்றுநர்களை கண்டுகொள்ள முடியவில்லை எனவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு பு.றெக்னோ முகதாவில் 374/23.11.2023 ஆம் இலக்கத்தில் பிரகடனப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த பிரதீபா குகதாஸ் பிரபதி ஆகியவர் ஆதனப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பிரதீபா குகதாஸ் பிரபதி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(089)

# இராசிபலன்

16.03.2024
பங்குனி 03, சனிக்கிழமை
சப்தமி பின்னிரவு 3.29 மணிவரை
ரோகினி முன்னிரவு 9.35 மணிவரை

சுபநேரம் -3.19-4.49 மணிவரை
இராகுகாலம்-9.19-10.49 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை.

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**துலாம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பிறரது ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சென்ற இடங்களில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள்.

**கும்பம்** மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், உறவினர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய நட்பால் சுபவிரயங்கள் ஏற்படலாம்.

**கன்னி** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ரோக பயமுண்டு, குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு** கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், உடல் நலன் சீராகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

அறிவு இருந்து ஆற்றல் இல்லையெனில் வாழ்க்கை சிறக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கடற்பரப்பில் கைதான 15 தமிழக மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 15 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு படகும் கைப்பற்றப்பட்டது.

யாழ். - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே நேற்று குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனையடுத்து இந்திய மீனவர்களை மயிலிட்டி துறைமுகத்தில் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும் இந்திய மீனவர்களை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (5-6-33)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலய பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த புதன்கிழமை வித்தியாலய முதல்வர் ப.தர்மபூவதி தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபையின் தலைவராக பாடசாலையின் முதல்வர் ப.தர்மபூவதியும் செயலாளராக கலாநிதி வைத்திலிங்கம் ஜெகதாஸ்ும் பொருளாளராக ஆசிரியர் திருமதி. சிவலோகநாதன் சாந்தினியும் உப செயலாளராக திருமதி.செல்வம் அனுசுயாவும் நிர்வாக உறுப்பினர்களாக , ச.நிஷாந்தினி, அ.சிந்துஷா, ஆ.சுகன்யா, இ.அனுரதன், ஜெ. ஜீவாந்தினி, தே.சங்கீதா, ம.வசந்தன், கு.டயானா, சி. நிரஞ்சனா மற்றும் ஆசிரியர் வி.சுகந்தினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (5-6-30)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி முதல்வர் ம.மகேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஓய்வு நிலை முன்னாள் அதிபர் நா.கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6-33)


## ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை :- பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் :- மரியாம்பிள்ளை றெக்ஸ் நியூட்டன்
சபை ஆதனவரி பதிவேட்டின் படி பெயர்:- -------------
முகவரி:- ஆதன இல 73 வீதி, அக்கத்தனை வீதி, வட்டாரம்- 03

வட்டாரம் 3, அக்கத்தனை வீதியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை "கம்பிராக்கட்டுவை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 3 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் எனது பிதா மாதா ஆகிய காலஞ்சென்ற அதிரியாம்பிள்ளை மரியாம்பிள்ளையும் பிலிப்பாச்சியும் ஆகிய இவர்களினால் கொள்விலையாக வாங்கப்பட்டு 1965ஆம் ஆண்டளவில் இவர்கள் இருவர் பெயரிலும் முறையான அறுதியுறுதி எழுதப்பட்டதென்றும் அன்றிலிருந்து இவ் ஆதனம் இவர்களின் சொந்த ஆதனங்களாக வரப்பட்டது என்றும் 1990 ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது எனது வீடு சேதமாக்கப்பட்டு இந்த உறுதியும் காணாமல் போய்விட்டது என்றும் பிதாமாதாவின் நீண்டகால தங்குதடையற்ற ஆட்சியிலும் இவர்களைத் தொடர்ந்து இவர்களின் ஒரே மகனாகிய எனக்கு வரப்பட்ட முதுச ஆட்சியிலும் நான் இவ் ஆதனங்களின் சொந்தக்காரனாக வந்து தங்கு தடையற்றதும் சுயாதீனமானதுமான ஆட்சி செய்து வருகின்றேனென்றும் இப்பொழுது இவ் ஆதனங்கள் எனது ஆட்சியில் உள்ளதென்றும் இவ்ஆதனங்களில் வேறு எவரும் உரிமை கோர முடியாதென்றும் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் அவர்களால் 8791 ஆம் இலக்க 30.03.2007 ஆம் திகதிய உறுதி எழுதப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் A.லோகநாதன் அவர்களால் வரையப்பட்ட 1485 ஆம் இலக்க 14.12.2020 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "கம்பிராக்கட்டுவை" நிலப்பரப்பு 3 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - இராயப்பு முத்துத்தம்பிக்கும் சந்திரசேகரம் பெண் சிசிலியாவுக்கும் உரிய ஆதனங்கள்
கிழக்கு - அந்தோனிப்பிள்ளை பெண் மரியப்பிள்ளைக்குரிய ஆதனம்
தெற்கு - ஒழுங்கை
மேற்கு - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை மரியாம்பிள்ளை றெக்ஸ் நியூட்டன் என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேட்டில் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு சபையின் ஆதன பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர் பதிவு செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 | 280 |
| தக்காளி | 200 | 200 | 250 | 300 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 150 | 200 | 120 |
| கோவா | 350 | 300 | 350 | 400 | 250 |
| கரட் | 400 | 500 | 550 | 600 | 250 |
| பூசணி | 180 | 220 | 200 | 300 | 150 |
| புடோல் | 140 | 160 | 160 | 200 | 120 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 380 | 400 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 550 | 580 | 600 | 600 | 480 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 500 | 300 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 400 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 200 | -- |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 350 | 250 |
| லீக்ஸ் | 250 | 300 | 400 | 400 | 220 |
| பீற்றூட் | 300 | 200 | 200 | 300 | 250 |
| கறிமிளகாய் | 400 | 400 | 350 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1200 | 700-1000 |
| போஞ்சி | 300 | 300 | 350 | 400 | 350 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 180 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 80 | 100 | 50 |
| தேசிக்காய் | 180 | 200 | 200 | 250 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 90 | 80-120 | 50-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 450 | 400 | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 300 | 100 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 80 | -- | 80 |


## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

## தேசிய தொழில்த்தகமை (NVQ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்-2024

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கிகாரம் பெற்ற பயிற்சி நெறிகள். கா.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழில்த் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்**

Diploma in Agricultural Production technology (NVQ 5 and 6)
ஆங்கிலமொழி மூலம் / English medium

**பயிற்சிநெறிக்காலம்**

ஒன்று / இரண்டு வருடங்கள் (ஆறுமாதம் / ஒரு வருட கால தொழிற்பயிற்சியுடன்)

**அனுமதி பெறுவதற்கான தகைமைகள்:**

க. பொ. த(சாதாரண) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க. பொ. த (உ த) பரீட்சையில் உயிரியல் / தொழில்நுட்பவியல் / ஏதேனும் ஒரு பாடத்துறையில் கல்வி பயின்று விவசாயப்பாடத்தினை கற்று அப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

**அல்லது**

தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level-04) பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக பயின்று சான்றிதழைப்பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகமைகள் க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆங்கில மொழி அறிவு (க.பொ.த.(சா.த)/சமமான ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமை)

**வயது எல்லை**
விண்ணப்பதாரிகள் 17 வயது தொடக்கம் 25 வயது வரை

தங்களின் சுயவிபரக் கோவையுடன் அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ 25.03.2024 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விவசாய உற்பத்தி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பம் எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும். நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் சுயவிபரக்கோவையில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு/மின்னஞ்சல் முகவரிக்கு அது தொடர்பாக தெரியப்படுத்தப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்புவதற்கு/ மேலதிகதகவல்களுக்கு**
**அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்**
**மருதனார்மடம், சுன்னாகம்.**

**தொலைபேசி:- 021 224 1420**
**மின்னஞ்சல்:- jcinstituteofagriculture@gmail.com**

(090), (C-8534)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம்
இந்திய-இலங்கை நட்புறவுக் கழகத்துடன்
இணைந்து நடத்தும்

## சிலப்பதிகார விழா-2024

காலம் : 16.03.2024 சனிக்கிழமை

காலை அமர்வு : 9.00 மணி    இடம்: நல்லை ஆதீன மண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**

மங்கல விளக்கேற்றல்

தமிழ்மொழி வாழ்த்து :செல்வி பிரகஸ்னி கணேசநாதன், செல்வி சகானா அரவிந்தன்

வரவேற்புரை :கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா
முதுநிலை விரிவுரையாளர், நடனத்துறை, சேர் பொன்னம்பலம்
இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக்கலைகள் பீடம்

உரை அரங்கம் :

கருப்பொருள் :சிலப்பதிகாரம் மக்கள் வாழ்வியற் காப்பியம்

அரங்கத் தலைமை :தகைசால் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

வாழ்த்துரை- முதன்மை விருந்தினர் :முனைவர் செ. கற்பகம்
நடனத்துறை தமிழ்ப் பல்கலைகழகம் தஞ்சாவூர், இந்தியா

தலைமை உரை

உரைகள்:

1. திரு. வேல் நந்தகுமார் "சிலப்பதிகாரத்தில் ஊரும் நாடும்"
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ்ப்பாணம்.
2. திருமதி. தர்மினி றஜீபன் "சிலப்பதிகாரம் காட்டும் சமூக இயைபாக்கம்"
சமூகசேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்.
3. திருமதி. செல்வ அம்பிகை நந்தகுமரன் "சிலப்பதிகாரத்தில் பெண்மொழிப் பயன்பாடு"
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
4. திரு.ச.பாலசண்முகன் "சிலப்பதிகாரத்தில் விழாக்களும் சடங்குகளும்"
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ்ப்பாணம்.

நன்றியுரை :
திரு. கருணாகரன் துணைச் செயலாளர், யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம்.

மாலை அமர்வு : பி.ப. 4.00 மணி

இடம் : துர்க்கா மணி மண்டபம், நல்லூர்.

மங்கல விளக்கேற்றல் : Dr. வாசுதேவன் இராசையா
(அகில இலங்கை சமாதான நீதவான்) தொழிலதிபர்

தலைமை: முனைவர் கிருஷாந்தி இரவீந்திரா
மேனாள் தலைவர், நடனத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
ஸ்தாபக இயக்குநர், நாட்டிய கலாகேந்திரா.உடுவில்.

மங்கல வாழ்த்து ஆடல்:

நெறியாள்கை : திருமதி கீதாஞ்சலி சுதர்சன். ஸ்வஸ்திக் கல்லூரி

தலைமையுரை: முனைவர் கிருஷாந்தி இரவீந்திரா

முதன்மை விருந்தினர் உரை : முனைவர் செ.கற்பகம்
நடனத்துறை, தமிழ்ப் பல்கலைகழகம் தஞ்சாவூர், இந்தியா.

சங்க இலக்கியக் கற்கைநெறித் தேர்வுச் சான்றிதழ் வழங்கல்

சிலப்பதிகார நாட்டிய நாடகம்:

உருவாக்கம் : பொன்னாலை சந்திரபாத கலாலாலயம்

நெறியாள்கை : நாட்டிய கலைமணி திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்

நன்றியுரை : திரு. பா.பாலகணேசன்
உப பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.
நிதிச்செயலர், யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம்.

(088)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

---

## மணிவிழா வாழ்த்தும்

### சேவை நலன் நயப்பு விழாவும்



திரு.காசிப்பிள்ளை ரவீந்திரராசா (B.A BED.DSM SLPS-I)

(அதிபர்-யா/உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்)

16.03.2024

அகவை அறுபதில்
மணிவிழாக் காணும் எம் தலைவா
முப்பத்தைந்து ஆண்டுகள்
நல் ஆசானாய் அதிபராய்
சேவை புரிந்திட நீவீர்
சமூகப் பணி சமயப்பணி என

உம் சேவையால்
தக்கார் போற்றும் பண்பாளனாய்
இனிதாய் இன்பமாய்
வளமாய் என்றும் இளமையாய்..
மனதார வாழ்த்துகின்றோம்.

Congratulations

(084)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

16.03.2024 இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்புவிழாவில்
சைவசித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டம்
பெறும் எமது அறநெறிப்பாடசாலையின் பொறுப்பாசிரியர்

சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர், சைவப்புலவர்

### துரைசிங்கம் பிரபாசன்

Dip.in Sinhala (TLC-Jaffna),
M.A(2 nd Upper)

(சிவத்திரு.தனியொளிசிவம் சிவஞெகிழன்)(இந்து தர்மாசிரியர், பாலபண்டிதர், நாடகக்கலைஞர், வில்லிசைக்கலைஞர், பொருளாளர். வலி-தென்மேற்கு பிரதேச கலாசார அதிகாரசபை கணக்காய்வாளர், வலி-தென் மேற்கு பிரதேச விளையாட்டுப் பேரவை) நிதி முகாமை அலுவலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)



Best Wishes

(083)

மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெறவேண்டி எல்லாம் வல்ல சிவப்பரம் பொருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். வாழ்க வளமுடன் வளர்க தமிழுடன்

வாழ்த்துவோர்-கட்டுடை அரசடி விநாயகர் அறநெறிப்பாடசாலைச் சமூகம்.

---

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1986 - இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 53<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: A/L, காசாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த அழகிய நல்ல குணமுள்ள பெண் .வெளிநாடு<br>தொ.இ: B/14143 | பிறப்பு-1997 -இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா- 6 1/4<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: BA(பட்டதாரி)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு. உத்தியோகம் (பட்டப்படிப்பு)<br>தொ.இ: G/14330 |
| பிறப்பு:1984 -இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: -<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்- A/L . அமைய அடிப்படை உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அழகிய பெண் .வெளிநாடு<br>தொ.இ: B/14145 | பிறப்பு-1991 -இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: - 35<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, London(PR)<br>எதிர்பார்ப்பு: லண்டனில் உள்ள மணமகன்<br>தொ.இ: G/14334 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 28<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்: O/L (Driver)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/14148 | பிறப்பு -1989 - இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா:- 52<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: வைத்தியர்(கண்)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer விவாகரத்து ஆனவரும்/பிள்ளை உள்ளவர்களும் பரவாயில்லை. (விவாகரத்து 3 வயதில் ஆண் குழந்தை இருக்கிறது.)<br>தொ.இ: G/14337 |
| பிறப்பு: 1995 - இந்து<br>நட்சத்திரம் : மூலம்<br>கி.பா: 1<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:- BA, Hotel Management, Diploma in Hospitality Management. Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: படிப்பு . வெளிநாடு முக்கியம்<br>தொ.இ: B/14150 | பிறப்பு -1996 -இந்து +RC<br>நட்சத்திரம் - திருவோணம்<br>கி.பா: -<br>தகைமை/தொழில்: விவசாய விஞ்ஞானப் பட்டதாரி (BSC)<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி, உள்நாடு<br>தொ.இ: G/14343 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்ட சூப்பர் ஹெவி



(வோஷிங்டன்)

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான மிகப் பெரிய ஸ்டார்ஷிப் "சூப்பர் ஹெவி" ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலக பணக்காரரான எலான் மஸ்க்கிற்கு சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் விண்வெளி நிறுவனம் பூமியின் சுற்றுப்பாதை, சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகத்திற்கு விண்வெளி வீரர்கள் மற்றும் பொருட்களை கொண்டு செல்லும் வகையில் ஸ்டார்ஷிப் "சூப்பர் ஹெவி" எனப்படும் உலகின் மிகப்பெரிய ராக்கெட்டை தயாரித்துள்ளது.

33 என்ஜின்கள் பொருத்தப்பட்ட இந்த ராக்கெட் 394 அடி உயரம் கொண்டது. இந்த ராக்கெட் சோதனை இரண்டு முறை தோல்வியில் முடிந்தது. அதில் ஏற்பட்ட தவறுகள் சரிசெய்யப்பட்டன.

இந்நிலையில் ஸ்டார்ஷிப் ராக்கெட் தெற்கு டெக்சாசின் போகா சிகாவில் உள்ள ஸ்பேஸ் எக்ஸ் ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் விண்ணில் செலுத்தப்பட்டது. இதை நேரலையில் 35 லட்சம் பேர் பார்த்தனர். வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்ட ராக்கெட் குறிப்பிட்ட இலக்கை சென்றடைந்தது. பின்னர் பூமிக்கு திரும்பி வந்து இந்தியப் பெருங்கடலில் இறக்க திட்டமிடப்பட்டது.

ஆனால் மீண்டும் வளி மண்டலத்தில் நுழைந்த போது ராக்கெட் திடீரென்று தொடர்பை இழந்தது. இறுதி இலக்கை அடைவதற்கு முன்பே தொடர்பை இழந்தது. கீழ் நிலை பூஸ்டர் வெற்றிகரமாக நீரில் தரையிறங்குவதில் தோல்வியடைந்தது.


இருந்தபோதிலும் இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டார்ஷிப்பின் மூன்றாவது ஏவுகணை சோதனையில் அதன் பல நோக்கங்களை பூர்த்தி செய்ய முடிந்ததாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்தது. (5-6)

# இலங்கையின் பொ

# பாகிஸ்தானுக்கும்

(இஸ்லாமபாத்)

**இலங்கையில் பொருளாதார மந்த நிலை**
**2 ஆண்டுகளுக்கு முன் அரசுக்கு எதிராக ம**
**போராட்டத்தில் ஈடுபட்ட நிலையே பாகிஸ்தானு**
**ஏற்படும் என பாகிஸ்தானின் முன்னாள் பிர**
**இம்ரான்கான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



ராவல்பிண்டியில் உள்ள அடியலா சிறையில் இம்ரான் கான் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

என்னுடைய அனைத்து கணிப்புகளும் உண்மையென நிரூபிக்கப்பட்டு உள்ளன.

2024 பொது தேர்தலில் பி.டி.ஐ. கட்சியானது திட்டமிட்டே வெளியேற்றப்பட்டது. ஆனால் வாக்காளர்கள் வாக்குப்பதிவு நாளில் இதற்கு பழி தீர்த்தனர்.

தேர்தல் முடிவை மாற்றி மோசடியில் ஈடுபட்டு தேசத்தின் நம்பிக்கை உடைத்து நொறுக்கப்பட்ட சூழலில், இலங்கையில் நடந்தது போன்று பாகிஸ்தானிலும் நடக்

# உக்ரைனுக்கு ஆதரவாக மேற்கத்தேய படைகளை அனுப்ப நேரிடும் - பிரான்ஸ் ஜனாதிபதி



(மொஸ்கோ)

ரஷ்ய உக்ரைன் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக மேற்கததேய நாடுகள் உக்ரைனுக்கு படைகளை அனுப்பக்கூடும் என பிரான்ஸ் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ரஷ்ய உக்ரைன் போரைத் தொடர்ந்து ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோனுக்குமிடையிலான நட்பில் பிரிவு உருவானது. நண்பர்களாக அவ்வப்போது சந்தித்துக்கொண்டு தொலைபேசியில் உரையாடிக்கொண்ட மெக்ரோனும் புடினும் இப்போது எதிரிகள் போல பேட்டிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்வகையில் ரஷ்ய உக்ரைன் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு படைகளை அனுப்பக்கூடும் என பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோன் சமீபத்தில் கூறியிருந்தார்.

அதற்கு பதிலடி கொடுத்துள்ள புடின் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலிருந்து பிரான்ஸ் படைகள் திருப்பி அனுப்பப்படுவதை சுட்டிக் காட்டியுள்ளார்.

மாலி முதல் சமீபத்தில் நைஜர் வரையிலான பல ஆபிரிக்க நாடுகளில் தீவிர வாதத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பிரான்ஸ் அனுப்பியிருந்த இராணுவ வீரர்களை அந்நாடுகள் திருப்பி அனுப்பிவிட்டன.

அது மட்டுமின்றி, பிரான்ஸ் படைகளை வெளியேற்றிய அந்நாடுகளின் தலைவர்கள் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து வருகிறார்கள். (5-6)

# செவ்வாய் கிரகத்தில்

# பூமியை பாதுகா

## பராக் ஒபாமா



(பாரிஸ்)

"செவ்வாய் கிரகத்தில் குடியேற வேண்டும் என்பதற்கான முனைப்பைவிட, மனிதகுலம் வாழத்தக்கதாக பூமியை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். ஏனெனில் அணுசக்தி யுத்தம் மற்றும் காலநிலை மாற்றம் போன்றவைக்கு பின்னரும், செவ்வாய் கிரகத்தை விட சிறப்பான வாழிடத்தை இந்த பூமி நமக்கு வழங்கக் காத்திருக்கும்' என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

பாரிஸில் நடைபெற்று வரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பல நாடுகளும் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை கொண்டு செல்லக்கூடிய விண்கலன்களை உருவாக்கி வருகின்றனர்.

செவ்வாயை பூமியின் காலனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ாருவாதார நிலையே ...ஏற்படும்-இம்ரான்

...லையால்
...க மக்கள்
...ானுக்கும்
பிரதமர்



கும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இறுதியாக ஒரு கடன் தொகையை பாகிஸ்தான் கேட்டுப் பெறவுள்ள சூழலில் பணவீக்கத்தின் புதிய அலை தோன்றும்.

அதன்பின் நாட்டில், மக்கள் தெருக்களில் இறங்கிப் போராடும் நிலை ஏற்படும். என்னுடைய அனைத்து கணிப்புகளும் உண்மையென நிரூபிக்கப்பட்டு உள்ளன.

பாகிஸ்தானில் அதிகாரத்தில் உள்ள ஆட்சியாளர்களிடம் ஒப்பந்தம் போடுவதற்காக, அவர்களிடம்பேச்சுவார்த்தை எதிலும் நாங்கள் ஈடுபடவில்லை. தேர்தல் மோசடிக்கு எதிராக எங்களுடைய கட்சி அமைதியான வழியில் போராடும்.

இதற்காக நாங்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகுவோம். ஏப்ரல் 2 ஆம் தேதி செனட் தேர்தல் நடைபெற திட்டமிடப்பட்டு உள்ளது. என அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனையடுத்து நவாஸ் ஷெரீப் கட்சியும் பூட்டோவின் கட்சியும் கூட்டணி அமைத்து ஆட்சிப் பொறுப்பேற்றது.

அதில் பாகிஸ்தான் பிரதமராக ஷெபாஸ் ஷெரீப், ஜனாதிபதியாக ஆசிப் அலி ஜர்தாரி தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## அகதிகள் படகு கவிழ்ந்ததில் 60 பேர் உயிரிழப்பு

(உரோம்)

லிபியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்ற அகதிகள் படகு மத்திய தரைக்கடல் பகுதியில் கவிழ்ந்ததில் 60 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்தியதரைக்கடலில் இயந்திரம் பழுதடைந்ததை தொடர்ந்து படகு நடுக்கடலில் பல நாட்கள் தத்தளித்ததால் குடியேற்றவாசிகள் பலர் உணவு நீரின்றி உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

25 பேரை 'எஸ்ஓஎஸ் மெடிட்ரோன்' என்ற மனிதாபிமான அமைப்பு இவர்களை மீட்டுள்ளது.

படகு பயணத்தை ஆரம்பித்து மூன்று நாட்களின் பின்னர் அதன் இயந்திரம் பழுதடைந்ததாகவும் இதனால் தாங்கள் நடுக்கடலில் தத்தளித்ததாகவும் உயிருடன் மீட்கப்பட்ட குடியேற்றவாசிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெண்களும் ஒரு குழந்தையும் உள்ளதாகவும் அவர்கள் கடலில் மூழ்கி இறக்கவில்லை உணவு குடிநீர் இன்மையால் உயிரிழந்தனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அந்த படகினை தொலைக்காட்டிகளை வைத்து அவதானித்த அரச சார்பற்ற அமைப்பு இத்தாலிய கடலோர காவற்படையினருடன் சேர்ந்து மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

உயிர்தப்பியவர்கள் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளனர் என அரச சார்பற்ற அமைப்பு தெரிவித்துள்ளது. அவர்களில் இருவர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 23 பேரை தமது கப்பலில் வைத்திருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒருவார காலமாக கடலில் தத்தளித்ததால் உணவும் குடிநீரும் விரைவில் தீர்ந்து விட்டது என உயிர்தப்பியவர்கள் தெரிவித்ததாக எஸ்ஓஎஸ் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.(5-6)



## ...ில் குடியேறுவதைவிட ...ாப்பதே முக்கியம்



யாக மாற்ற முயல்கிறார்களாம். பூமியின் சுற்றுச்சூழல் மிகவும் சீரழிந்து, அது வாழத்தகுதியற்ற இடமாக மாறிவிடும் என்பதால் செவ்வாய் கிரகத்தின் காணித்துவ திட்டத்தைப் பற்றி பலர் பேசுவதை கேட்கிறேன்.

அப்போதெல்லாம் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது ஒன்றுதான். ஒரு அணு ஆயுதப் போருக்குப் பிறகும் பூமி செவ்வாய் கிரகத்தைவிட வாழத் தகுதி மிக்கதாகவே இருக்கும்.

காலநிலை மாற்றத்திலிருந்து நாம் மீள எதுவும் செய்யாவிட்டாலும், பூமியில் ஒக்ஸிசன் மிச்சமிருக்கும். ஆனால் செவ்வாய் கிரகத்தில் அது சாத்தியமல்ல. எனவே, செவ்வாய் கிரகத்தில் குடியேறுவதை விட பூமியை கவனியுங்கள் என்கிறேன்.

நாம் இந்த பூமியில் வாழ்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளோம். மேலும் இந்த பூமியை பாதுகாத்து நாம் வாழக்கூடிய வகையில் வைத்திருந்தால் நன்றாக இருக்கும்' என தெரிவித்துள்ளார். (5-6)

## போருக்கு மத்தியில் ஆரம்பமான ரஷ்ய ஜனாதிபதித் தேர்தல்



(மொஸ்கோ)

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கிடையிலான போர் இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து வரும் நிலையில் ரஷ்யாவில் நேற்று ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு ஆரம்பமாகியுள்ளது. இந்தத் தேர்தல் நாளைவரை இடம்பெறவுள்ளது.

ரஷ்யாவின் தற்போதைய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு எதிராக லியோனிட் ஸ்லட்ஸ்கி, நிகோலாய் கரிடோனோவ் மற்றும் விளாடிஸ்லாவ் தவன்கோவ் ஆகியோர் இந்த ஜனாதிபதித் தேர் தலில் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளனர்.

29 மாநிலங்களில் உள்ள மக்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கவுள்ள நிலையில், வெளிநாடுகளில் வசிக்கும் ரஷ்யர்களுக்கு இணைய வழி மூலம் அல்லது அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்களின் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

உலகின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக வலம் வரும் புடின், சுமார் 20 வருடமாக ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார்.

இதனிடையே உக்ரைன் மீது போர் தொடங்கிய பிறகு புடினுக்கு உள்நாட்டில் கடுமையான எதிர்ப்புக்கள் கிளம்பின. மேலும் சமீபத்தில் ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவால்னி மர்மமான முறையில் உயிரிழந்ததும் புடினுக்கு கடும் நெருக்கடியை கொடுத்தது.

இந்த தேர்தல் புடினின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தல் என்பதால் புடின் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்க தீவிரம் காட்டி வருகின்றார்.

ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் சுமார் 11.4 கோடி பேர் வாக்களிக்க உள்ளதாகவும் கூறப்படுகின்றது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிபொருட்களை அகற்றும் இயந்திரங்களை வழங்கிய சீனா



(கொழும்பு)

சீன இராணுவ உதவித் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சிற்கு வெடிபொருட்களை செயலிழக்கச் செய்யும் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென் ஹொங், பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே ஆகியோரிடம் குறித்த உபகரணங்கள் கடந்த புதன் கிழமை கையளிக்கப்பட்டன.

இவ்வாறு கையளிக்கப்பட்ட உபகரணத்தொகுதியில் வெடிபொருட்களை இனங்கண்டு அவற்றை செயலிழக்கச் செய்யும் REOD 4000 என்ற ரோபோ இயந்திரங்கள் 18, வெடிபொருட்களை ஒரு இடத்திலிருந்து பிரிதொரு இடத்துக்கு கொண்டு செல்லும் இயலுமையுடைய REOD 400 ரக ரோபோக்கள் 18, வெடி பொருட்களிடமிருந்து பாதுகாக்கக் கூடிய 10 பாதுகாப்பு அங்கிகள், வெடி பொருட்களிடமிருந்து பாதுகாப்பு பெறக் கூடிய 10 வாயு தாங்கிகள் மற்றும் வெடிபொருட்களை செயலிழக்கச் செய்யும் இயந்திரங்கள் என்பன உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# இறுதியாக இருந்த ஆண் வரிக்குதிரையும் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்த கடைசி ஆண் வரிக்குதிரையும் உயிரிழந்ததாக தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை தெரிவித்துள்ளது.

குறித்த வரிக்குதிரை ரிதியகம சபாரி பூங்காவில் இருந்து இனப்பெருக்க செயற்பாடுகளுக்காக தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், குறித்த வரிக்குதிரையை கொண்டு வரும் போது அதற்கு அதிக செறிவு மிக்க ஊசி செலுத்தப்பட்டமையினால் அது உயிரிழந்ததாக தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச் சாலையின் பணியாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (5-6)

# நீதிபதிகள் பற்றாக்குறை சட்டத்தரணிகள் சங்கம் கவலை

(கொழும்பு)

உயர் நீமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்களில் நிலவும் நீதிபதிகளின் வெற்றிடம் அதிகரிக்கின்றமை தொடர்பில் கவலையடைவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துத்ள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினைகளுக்கு தீர்மானம்மிக்க முடிவு எட்டப்பட வேண்டும் என அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இத்தகைய செயற்பாடானது நீதித்துறை கட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இதன் காரணமாக உயர்நீதிமன்ற நீதியரசர்களின் வெற்றிடங்களை விரைவில் நிரப்ப அரசியலமைப்பு பேரவை மற்றும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு தேவையான அனைத்து ஆதரவையும் வழங்க தயாராகவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (5-6)

# பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ள சுகாதார தொழிற்சங்கம்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மீண்டுமொரு வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டணி அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

தங்களது கோரிக்கை தொடர்பிலான அறிக்கை சுகாதார அமைச்சினால் நிதியமைச்சிடம் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை உரிய தீர்வு முன்வைக்கப்படவில்லை.

தொழிற்சங்க நடவடிக்கையினை தற்காலிகமாக நிறுத்தி நிதியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்ட போதிலும் இதுவரை உரிய தீர்வு முன்வைக்கப்படவில்லை எனவும் சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார். (5-6)

# இன்று ஒரு தகவல் 66



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அறிவு

வணக்கம்! வாங்க சார் வாங்க... வலது காலை எடுத்து வைத்து வாங்க!

யாருக்கு இந்த வரவேற்பு ?

உங்களுக்குத்தான்! வேறு யாருக்கு?

எனக்கு என்னமோ பயமாக இருக்கிறது.

பயப்படாதீர்கள்... உள்ளே வாங்க...!

ம்... வந்துவிட்டேன்!

இப்போது சொல்லுங்கள்...(கோபமாக) எங்கே போய்விட்டு வருகிறீர்கள்? பார்த்தியா... இதுக்குத் தான் அப்பவே சொன்னேன் பயமாக இருக்கிறது என்று. ஆமாம் இப்படி திடீரென்று தலைமறைவானால் என்ன அர்த்தம்? அதனாலே இப்போது என்ன ஆகிவிட்டது. என்ன ஆகிவிட்டது... இன்று ஒரு தகவல் என்று ஆரம்பித்து தினம் கொஞ்ச நாள் என்னத்தையோ சொல்லிக்கொண்டு இருந்தீர்களே!

ஆமாம் அதை பாதியிலே விட்டுவிட்டுப் போய்விடுவதா? கை வசம் இருந்தது... இது வரைக்கும் சொன்னேன்! உங்கள் கைவசம் ஒன்றுமில்லை.

இல்லை என்கின்ற இரகசியம் எல்லாருக்கும் தெரியும்... அங்கே இங்கே கண்டது, கேட்டது, படித்தது இதை வைத்துத்தானே சொல்லிக்கொண்டு இருந்தீர்கள். சொந்த சிந்தனை ஏது? ஆமாம் உண்மையை ஒத்துக் கொள்வது தான் நல்லவர்களுக்கு அழகு.

அதனாலே வழக்கம் போல கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்க ஆரம்பியுங்கள். ஆரம்பிக்கலாம் என்கிறாயா?

ஆமாம் அறிவுக்கு பயன்படுகின்ற விடயங்கள் எல்லாருடைய காதிலும் கேட்கின்ற மாதிரி செய்வது நல்லது தானே. இப்போது உலகத்திலே நிறைய பேருக்கு அறிவு நிறையவே இருக்கு அதனாலே தான் ஆபத்து. ஏன்? அந்த அறிவைப் பயன்படுத்தி என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா? மிக நவீனமான வெடிகுண்டுகள் தயார் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இது என்னத்துக்கு? இதைத்தான் நானும் கேட்கின்றேன் இப்படி வெடிகுண்டுகள் தயார் செய்வதற்கு தேவைப்படுகிற பணத்தை யுனெஸ்கோ நிறுவனத்திற்கு கொடுத்தால் உலகத்திலே எல்லோருக்கும் கல்வி அறிவை உண்டாக்கி விடலாம் என்று பல பெரியவர்கள் சொல்லுவார்கள். நல்ல யோசனை தான் இருந்தாலும் எனக்கு அதிலேயும் ஒரு பயம். அப்படி உலகத்திலே எல்லோரையும் அறிவாளிகளாக உருவாக்கி விட்டால் என்ன ஆகும் தெரியுமா.

என்ன ஆகும்? ஆளுக்கு ஆள் வெடிகுண்டு தயார் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அப்படி என்றால் உலகத்திற்கு அறிவாளிகளாலே தான் ஆபத்து என்று சொல்லுறீங்களா? அறிவாளிகள் அறிவைத் தவறான வழியிலே பயன்படுத்தினால் ஆபத்து அதிகம் என்று சொல்லுகிறேன்!

அது உண்மை தான்!

ஐக்கிய நாடுகள் சபையிலே ஆயுதத்தடை நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கே இருந்த டொக்டர் பைசண்ட் படேல் என்கின்றவர் என்ன சொன்னார் தெரியுமா? என்ன சொன்னார்?

ஒரு போர் விமானம் தயார் செய்வதற்கு 50 கோடி டொலர் செலவாகிறது. இந்தப் பணத்தை உலக நலவாழ்வு ஸ்தாபனத்தினரிடம் கொடுத்தால் இந்த உலகத்திலே மலேரியா, தொழுநோய், சருமநோய் இது எல்லாம் சுத்தமாக இல்லாமல் செய்து விடலாம் என்று சொன்னார். கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் கொடுப்பதற்கு மனசு இடம் கொடுக்க வேண்டுமே. அந்த மனசு எப்ப வரும். தன்னலத்தை முழுவதுமாக தியாகம் செய்தால் தான் வரும். பெரியவர்கள் எல்லாரும் என்ன சொல்லுகின்றார்கள் தெரியுமா? என்ன சொல்லுகின்றார்கள்?

தன்னலத்தை முழுமையாக தியாகம் செய்வது தான் ஸநாதன தர்மத்தின் இலட்சியம் என்று சொல்லுகின்றார்கள். சொத்து சுதந்திரங்களை நமே வைத்துக் கொண்டு அனுபவிக்கிறதாலே கிடைக்கின்ற சுகம் தற்காலிகமானது. இந்த உடைமைகளை நாம் வைத்துக்கொண்டு அனுபவிக்கிறதை விட கொடுத்து அனுபவித்தால் அதுவே பரம ஆனந்தத்தைக் கொடுக்கின்றது. சாசுவதமான சௌக்கியத்திற்கும் வழி கோலுகின்றது என்று பெரியவர்கள் சொல்லுகின்றார்கள்.

கொடுக்கிறது என்பது உண்மையிலே ரொம்ப பெரிய விடயம் இருந்தாலும் கொடுத்து விட்டு கொடுத்தேன் கொடுத்தேன் என்று சொல்லி படம் பிடிக்கிறது. பேப்பர்ல போட்டுக்கொள்வது இது தான் இன்றைக்கு அதிகமாக இருக்கின்றது. கொடுத்துவிட்டு கொடுத்தேன் என்ற எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டே இருந்தால் அந்த அகங்காரம் தியாகத்தினாலும் தானத்தினாலும் கிடைக்கின்ற ஆத்மா அபிவிருத்தியை அப்படியே ஏப்பம் விட்டுவிடும்.

தியாகம் செய்தாலும் அதை விட முக்கியமாக தியாகம் செய்தேன் என்கின்ற எண்ணத்தையும் தியாகம் செய்துவிட வேண்டும். இது பெரியவர்கள் கருத்து.

பரவாயில்லை கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாலும் இன்றைக்குப் பெரிய கடையாக பார்த்து தேங்காயை எடுத்து இருக்கிறீர்கள். உடைத்ததற்கு பலன் இருக்குமா? உடனடியாக பலன் கிடைத்துவிட்டது. எப்படி? நான் அறிவாளி ஆகிவிட்டேனே அப்படி என்றால் உங்களிடம் ஒரு முக்கியமான வேண்டுகோள். வீட்டுக்குள்ளேயே வெடிகுண்டு தயார் செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்துவிடாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை வர்த்தக உறவை பலப்படுத்த வேண்டும்



(கொழும்பு)

இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் இந்திய - இலங்கை வர்த்தக உறவினைப் பலப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவும் இலங்கையும் இணைந்து வெளியிட்டுள்ள தொலைநோக்கு அறிக்கை தொடர்ந்து பின்பற்றப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இலங்கை - இந்திய சமூகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையை நினைவுகூரும் வகையில் விசேட நினைவுச் சின்னமொன்றும், இந்திய - இலங்கை உறவுகளில் அண்மையில் இடம்பெற்ற விசேட தருணங்கள் அடங்கிய ஆவணம் ஒன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## வடக்கு மாகாண பிரதம செயலாளராக இளங்கோவன் பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக எல்.இளங்கோவன் நேற்று தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

யாழ். கைதடி யில், வடக்கு மாகாண சபையில் உள்ள அலுவலகத்தில். குறித்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுகளின் உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதம செயலாளர், செயலக உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-33)

# இலங்கை வங்கியின் புதிய தலைவராக காவன் ரத்நாயக்க



(கொழும்பு)

இலங்கை வங்கியின் புதிய தலைவராக காவன் ரத்நாயக்க நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

காவன் ரத்நாயக்க ரணில் விக்கிரமசிங்கவின் ஆளணி பிரதானியும் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆலோசகருமான முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் சகோதரராவார்.

இதற்கு முன்னர் இலங்கை வங்கியின் தலைவராக அதிபர் சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா பதவி வகித்ததுடன் கடந்த புதன் கிழமை அவர் அந்த பதவியிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## காசநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் காசநோயாளர்களின் எண்ணிக்கை 14 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக காசநோய் கட்டுப்படு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய வேலைத் திட்டம் தெரிவித்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட காச நோயாளர்களில் நாள் ஒன்றுக்கு இரண்டு பேர் மரணிப்பதாக அந்த வேலைத்திட்டம் குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மாத்திரம் நாட்டில் 9 ஆயிரத்து 358 காச நோயாளர்கள் பதிவாகினர் இதுவே அண்மையில் பதிவான அதிகூடிய எண்ணிக்கையாகும். நாட்டில் அதிகளவான காச நோயாளர்கள் மேல் மாகாணத்தில் கொழும்பு நகர எல்லையிலே பதிவாகியுள்ளனர். (5-6)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3065

### சாளினி




### சபரிசா




### துசா





### ஆகாஷ்




### தனு




### மது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 432





நினைவிருக்கிறது ஐயா! நன்றாக நினைவிருக்கிறது. இவ்வாறெல்லாம் சொல்ல வேண்டும் என்று அந்த பேதைப் பெண்ணின் உள்ளம் துள்ளித் துடித்தது.

ஆனால் அவளுடைய பவள இதழ்களோ நினைவிருக்கிறது! என்ற இரு சொற்களை மட்டுமே முணு முணுத்தன.

ஆகா! சமுத் திரகுமாரி நீ வாய் திறந்து பேசுகிறாயே இந்த அதிசயமான இலங்கைத் தீவிலே உள்ள எத்தனையோ மணிமாட மண்டபங்களின் தூண் களில் அழகிய தேவகன் னிகைகளின் சிலைகளை அமைந திருக்கிறார்கள். ஒரு வேளை அத்தகைய சிலை வடிவமோ நீ என்று நினை த்தேன். நல்ல வேளையாக நீ வாய் திறந்து பேசுகிறாய். இன்னும் சில வார்த்தைகள் சொல். உன் இனிய குரலைக் கேட்க எனக்கு எவ்வளவோ ஆசையாயிருக்கிறது.

நம் சேனாபதியிடம் நீ சில விடயங்களைச் சொன னாயாம். தொண்டை மான் நதியில் இரண்டு பெரிய மரக்கலங்கள் வந்து மறைவான இடத்தில் ஒதுங்கி யிருப்பதாகவும் அதில் நிறையப் போர்வீரர்கள் வந்திருப்பதாயும் சொன் னாயாம். அது உண்மைதானே சமுத்திரகுமாரி? அந்தக் கப்பல்களை உன் கண்களினால் நீயே பார்த்தாயா? என்று இளவரசர் கேட்டார்.

"ஆம், ஐயா, என் கண்களினால் பார்த்தேன்" என்றாள் பூங்குழலி. ஆகா! இப்போது கொஞ்சம் உன் குரலைக் கேட்க முடிகிறது. என் செவிகள் இன்பமடைகின்றன. நல்லது மரக்கலங்களைப் பார்த்ததும் நீ உன் படகை ஒரு குறுகிய கால்வாயில் விட்டுக் கொண்டு போனாய். கப்பல்கள் போகும் வரையில் காத்திருப்பதற்காக அடர்ந்த காட்டினுள் புகுந்து மறைவான இடத்தில் படுத்துக் கொண்டிருந்தாய்.

அச்சமயம் கப்பல்களிலிருந்து இறங்கிய வீரர்கள் சிலர் அங்கே வந்தா ர்கள். நீ படுத்திருந்த இடத் திற்குப் பக்கத்தில் அவர்கள் நின்று பேசிக்கொண்டார் கள். அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்க வேண்டும் என்று நீ விரும்பவில்லை. உன் விருப்பமில்லாமலே அவர் கள் பேச்சு உன் காதில் விழுந்தது. நீ கேட்கும்படி நேர்ந்தது.

இவையெல்லாம் நம் சேனாதிபதியிடம் நீ கூறியவை தானே? நடந்ததை நடந்தபடியே கூறினேன்.

அவர்களுடைய பேச்சைக் கேட்டது, அதைப்பற்றி உடனே சேனாதிபதியிடம் எச்சரிக்கை செய்யவேண்டும் என்று உனக்குத் தோன்றியது. வீரர்கள் அப்பால் போன உடனே நீ புறப்பட்டாய். சேனாதிபதி இருக்குமிடத்தைத் தேடிக் கொண்டு விரைந்து வந்தாய் எப்படி வந்தாய், சமுத்திரகுமாரி?

பாதி வழி படகில் வந்தேன் பிறகு காட்டு வழியில் நடந்து வந்தேன்.

"எங்கே போகும் உத்தேசத்துடன் கிளம்பினாய் அம்மா? சேனாதிபதி மாதோட்ட நகரில் இருப்பார் என்று எண்ணி அங்கே போகும் உத்தேசத்துடன் வந்தேன். வழியில் மகிந்தலையில் இருப்பதாக அறிந்தேன். சேனாதிபதியைப் பார்த்துச் சொல்வதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது.

எத்தனை பேர் குறுக்கே நின்று தடுப்பது? என்று சொல்லிப் பூங்குழலி சேனாதிபதி நின்ற பக்கம் நோக்கினாள். அவளுடைய பார்வையில் கோடை காலத்து இடி முழக்கத்துக்கு முன்னால் தோன்றும் மின்வெட்டு ஜொலித்தது.

சேனாதிபதியைப் பார்ப்பது என்றால் இலேசான காரியமா? இதோ நிற்கும் என் சிநேகிதர் உன்னைப் போலவே சேனாதிபதியைப் பார்க்க முயன்று அடைந்த கஷ்டத்தைக் கேட்டால் நீ ஆச்சரியப்பட்டுப் போவாய்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அடைக்கலமும் ஆபத்தாகும்

ஒரு ராஜா, அவர் பஞ்சணையில் மந்த விசர்ப்பணி என்னும் ஒரு சீலைப்பேன் நெடு நாளாக வாசம் பண்ணிக் கொண்டிருந்தது. ஒரு நாள் எப்படியோ ஒரு மூட்டைப் பூச்சி வந்து சேர்ந்தது.

சீலைப்பேனுக்கு திக்கென்றது நீ எங்கே வந்தாய்? போய்விடு என றது சீலைப்பேன். ஏன்? ராஜாவின் பஞ்சணை உனக்கு மட்டும் தான் சொந்தமா? என்று திருப்பிக் கேட்டது மூட்டைப் பூச்சி.



மகாராஜாவே மக்களுக்குச் சொந்தம் அவர் பஞ்சணை உனக்கு மட்டும் சொந்தமா என்ன. நீ பொல்லாதவன், முட்களைப் போன்ற பற்களினால் துங்குவதற்கு முன்பே துடுக்காய்க் கடிப்பவன். சமயம் தெரியாதவனாதலால் ராஜாவின் படுக்கையில் இருக்கத்தக்கவனல்ல இவ்விடம் விட்டுப் போய்விடு [illegible] பரபரத்தது சீலை[illegible]

அதற்கல்லவா தெரியும் தினமும் பக்குவமாக நாளைத்தள்ளி வருவதில் உள்ள சிரமம்!

ஆனால், கெட்டிக்கார மூட்டைப்பூச்சி சட்டென்று அதன் காலைப்பற்றிக் கொண்டு நான் அப்படி [illegible] [illegible]பேன் என்று கெஞ்சியது. இராஜரத்தம் கிடைப்பது இலேசா? எந்த ஜென்மத்துப் புண்ணியமோ இப்போது கிட்டியுள்ளது. கெஞ்சுவதற்குத் தய்ங்கினால் அரசனது ரத்தம் தன் வயிற்றுக்குக் கஞ்சியாகுமா?

காலைப் பிடித்து விட்டதால் கருக்காகப்பேச முடியவில்லை சீலைப்பேனால். சரி! நீ வெடுக்கென்று கடிக்கக் கூடாது. கடிக்க மாட்டேன் நித்திரை செய்யும் போது தான் மெத்தென்று வலி தெரியாமால் மெல்லக் கடிக்க வேண்டும்.

அப்படியே செய்கிறேன் கொஞ்சமாகத் தான் ரத்தம் குடிக்க வேண்டும்.

கொஞ்சமே போதும் சரி அப்படியானால் இரு என்றது சீலைப்பேன். சொல்லி வாய் மூடவில்லை.

அரசர் களைப்போடு வந்து பஞ்சணையில் அமர்ந்தார். இரவுப் பொழுது ஆதலால் உறங்குவதற்கு பத்து நிமிடம் ஆகி இருக்காது. மூட்டைப்பூச்சி நறுக்கென்று கடிக்க ராஜா திடுக்கென்று எழுந்து கொண்டார்.

சேவகர்களை அழைத்து ஏதோ கடித் தது , பார் என்றார். சேவகர்கள் போர்வை உட்பட அனைத்தையும் கூர்மையாகச் சோதித்தார்கள்.

மூட்டைப்பூச்சி கட்டிலின் இடுக்கிலே ஓடிப் புகுந்து கொண்டது. ஆனால் சீலைப்பேன் சிக்கிக் கொண்டது. போர்வையோடு ஒட்டியிருந்ததால் சேவகரின் பார்வையில் பட்டுவிட்டது

அடுத்த கணம் பரிதாபமாக நசுக்கப்பட்டு இறந்தது. அந்தச் சீலைப்பேன், அடைக்கலமும் ஆபத்தாகும் என்பதைப் போல். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான எண்ணங்களால் மனம் நிறைந்திருந்தால், நான் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சி தரும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் வாழ்வியலில் இருந்த திண்ணைக் கலாசாரம் எங்கே?

பங்குனி மாதம் பகல் வழிப் போபவரைப் பார்ப்பதே பாவம் என்று நம்மவர்கள் கூறி வைத்தனர்.

ஆம், பங்குனி மாதம் வெய்யிலின் உச்ச காலம். அதனாலேயே மேற்போந்தவாறு நம் முன்னவர்கள் கூறினர்.

இப்போது வெப்பம் உச்சமடையும் என்றும் பகல் பொழுதில் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும் அதிகளவு தண்ணீர் அருந்துமாறும் துறைசார் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதனையே நம் முன்னவர்கள் பங்குனி மாதம் குறித்து எச்சரிக்கை செய்தனர்.

இதுதவிர, எங்கள் தமிழர் வாழ்வியல் என்பது நாம் வாழும் சூழலின் வெப்ப தட்ப நிலைமைகளுக்கு ஏற்றதாகவும் நிர்ணயம் செய்யப்பட்டதென்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

ஆம், ஒரு காலத்தில் எங்கள் வீடுகள் தோறும் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அமைக்கப்பட்ட திண்ணைகளில் குடிநீர் வைக்கப்பட்டிருந்தது.

இங்குதான் எங்கள் வாழ்வியலின் உயர்ந்த அறமும் இல்வாழ்வின் மகத்துவமும் உணர்த்தப்படுகிறது.

உண்மை. வீதியால் நடந்து செல்பவர்கள் களைத்துப் போகின்ற சந்தர்ப்பங்களில் வீடுகள் தோறும் இருக்கக்கூடிய திண்ணைகளில் தங்கியிருந்து தாகம் தணித்து களைப் பாறிச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தவிர, வீட்டுக்கு வெளியில் தொட்டி அமைத்து அதில் தண்ணீர் இறைத்து, தெருவால் செல்கின்ற பசுக்கள் தண்ணீரைக் குடிப்பதற்கு வசதி செய்யப்பட்டதோடு, அருகில் ஆஉரஞ்சிக் கல்லும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆம், இன்று திண்ணைக் கலாசாரத்தை எங்கும் காண முடியாது.

தாகமாக இருக்கிறதே என்றால் தண்ணீர் அருந்துவதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை.

இங்குதான் எங்கள் இல்வாழ்க்கை எங்ஙனம் மாற்றமுற்றுள்ளதென்பதை உணர முடியும்.

ஆம், வீதிகளில் வீற்றிருந்து நிழல் தந்த மரங்கள் தறியட்டுப் போயின.

எஞ்சியிருக்கின்ற மரங்களும் மின்சாரக் கம்பியில் முட்டுகின்ற குற்றச்சாட்டில், அவற்றின் கிளைகள் வெட்டித் தண்டிக்கப்பட்டுள்ளன.

கூடவே செவ்விளநீர் தந்து எங்கள் உயிர் காத்த தென்னைகள் கொடுநோயுற்று, தன்னிலை இழந்து, தோற்றம் மாறி, தீரா நோயால் துவண்டு போயுள்ளன.

இந்நிலையில், கொட்டும் வெய்யிலில் பயணிக்கின்றவர்கள் அங்கும் இங்கும் பார்க்கின்றனர். குடிநீர் ஏதும் உண்டோ என்று.

அன்புக்குரியவர்களே! எங்கள் வீட்டு வளவின் நுழைவாயில் தோறும் குடிநீர் வசதிகளைச் செய்து வைப்போம்.

வசதியாயின் குழாய்கள் மூலம் குடிநீரைப் பருகுவதற்கு வழி சமைப்போம். அதில் சுத்தமான குடிநீர் என்று எழுதி வைப்போம்.

திண்ணைக் கலாசாரம் நம்மைவிட்டு நீங்கினும் அதன் நோக்கம் எதுவோ அதை நிறைவேற்ற மாற்றுவழிகளைச் செய்து எம் தமிழர் வாழ்வியலின் உன்னதத்தைக் காத்து நிற்போம்.

# வெளிநாட்டு சக்திகளின் கைப்பொம்மையாக அரசாங்கம்

## முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதாகக் கூறிக்கொண்டு இந்த அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளின் கைப் பொம்மையாகியுள்ளதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாட்டைப் பாதுகாப்பதற்காகவும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காகவே அனைத்து வழிகளிலும் நாம் ஒத்துழைப்பு வழங்கினோம். எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே செயற்படுவோம். இந்த நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் நாம் யாருக்கும் அடிமைகளாக செயற்பட வேண்டிய தேவைகிடையாது.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதாக கூறிக்கொண்டு இந்த அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளின் கைப்பொம்மையாகியுள்ளது. இது மிகவும் தவறானது. நாட்டின் இறைமையை பாதுகாக்கக்கூடிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

ஊழலை ஒழித்து நாட்டை கட்டியெழுப்புவது எமது கூட்டணியின் கொள்கையாகும். இந்த நாட்டின் ஊழல்களை 24 மணிநேரத்திற்குள் முடிவுக்கு கொண்டுவந்து 25 ஆவது மணித்தியாலத்தில் இருந்து ஊழலற்ற புதிய பயணத்தை ஆரம்பிக்க முடியும் இவ்வாறு ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் கோரல்

2021/2022 கல்வி யாண்டில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கான விண்ணப்பங்களை அழைப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2376 நேற்றைய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இணையவழி முறையின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தகுதியான வர்கள் தேர்வும் இம்முறை இணையவழி ஊடாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப காலம் 05.04.2024 அன்றுடன் நிறைவடைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## யுக்திய நடவடிக்கை கடந்த 24 மணி நேரத்தில் 944 பேர் கைது

யுக்திய நடவடிக்கையின் கீழ் கடந்த 24 மணித்தியாலயத்திற்குள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 944 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 65 சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மேல் மற்றும் தெற்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலும் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் உயர்வடைந்துள்ளதுடன் டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 310.20 ரூபாவாகவும், கொள்வனவு விலை 300.60 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை கனேடிய டொலரின் விற்பனை விலை 230.42 ரூபாவாகவும், கொள்வனவு விலை 220.67 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 338.99 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 325.31 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் நேற்றைய விற்பனை பெறுமதி 396.50 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 381.43 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ம-7)

## பல்கலை மாணவியின் கணனி திருட்டு

### மற்றொரு மாணவி கைதாகி விடுதலை

(கொழும்பு)

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவியின் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கணனியை திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்டு கைதான பல்கலைக்கழக மாணவி ஒருவரை இரண்டு இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்ய மஹர நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் குருணாகல் பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடைய பல்கலைக் கழக மாணவியாவார்.

குற்றம் சாட்டப்பட்டவரும் கணனியின் உரிமையாளரும் களனி பல்கலைக்கழக விடுதியின் அறையொன்றில் ஒன்றாக தங்கியிருந்ததாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேகநபர், பல்கலைக்கழக விடுதியின் அறையில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தின் போது அறையில் இருந்த கணனியை திருடி குருணாகல் பிரதேசத்தில் விற்பனை செய்துள்ளதாகவும் இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட கணனி கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றில் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மஹர நீதிமன்ற நீதவான் காஞ்சனா த சில்வா மேலும் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

## யானை தாக்கியதில் சுற்றுலாப் பயணி பலி

பொத்துவில், மணல் சேனை, கோமாரி பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிஒருவர் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கோமாரி பகுதியில் இரண்டு இத்தாலிய சுற்றுலாப் பயணிகள் மோட்டார் சைக்கிளில் சென்ற போது யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்கள்.

இந்நிலையில், காயமடைந்தவர்கள் 1990 என்ற அவசர நோயாளர் காவு வண்டி மூலம் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது ஒரு சுற்றுலா பயணி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இத்தாலிய சுற்றுலாப் பயணியான 50 வயதுடைய ஜிஞ்சினோ பாலோ என்பவர் என தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


பொலிஸ் அத்தியட்சகர் வெஹித தேவபியவின் பணிப்புரையின் பேரில் பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கமல் செனவிரத்ன மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

23



1961 முதல் 1968 ஆம் ஆண்டு வரை மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றினார். இக்காலத்திலேயே பண்டிதர் கா. பொ.இரத்தினம் அவர்களும் இங்கு பேராசிரியராகக் கடமையாற்றினார். 1969 இல் மலேசியாவை விட்டு நீங்கியவுடன் பாரிசு மற்றும் நேப்பிள்ஸ் பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

தூத்துக் குடியில் பணியாற்றிய காலத்தில் தனிநாயகம் அடிகளார் தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பினை நிறுவி 1952 ஆம் ஆண்டில் Tamil Culture (தமிழ்க் கலாசாரம்) என்னும் ஆங்கிலக் காலாண்டு இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். இவ்விதழ் அமெரிக்க ஐரோப்பிய பல்கலைக் கழகங்கள் வரை சென்றடைந்தது. இதன் காரணமாக தமிழ் கற்கும் வேற்று மொழி இனத்தவர்களான சுவெலபில், பிளியோசற், அந்திரோனொவ், எமனு, குய்ப்பர், நோல்டென், மார், பொக்சர், பறோ ஆகியோர் இவ்விதழில் தொடர்ந்து தமது ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டு வந்தனர்.

1961 இல்சென்னையில் "தமிழ்ப் பண்பாட்டுக்கழகம்" (Academy of Tamil Culture) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். முதல் தமிழாராச்சி மகா நாட்டினைத் தொடர்ந்து மலேசியாவிலிருந்து உலகத்தமிழ் ஆய்வு மையத்தின் சார்பாக "Journal of Tamil Studies" என்னும் ஒரு இதழுக்கான ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றி பல சிறந்த அறிஞர்களின் கட்டுரைகளை வெளிக் கொணர்ந்தார்.

தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செழுமையையும் உலகில் பரப்பும் நோக்கோடு சப்பான், சிலி, பிரேசில், பெரு, மெக்சிக்கோ, எக்குவடோர், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து ஓர் ஆண்டிலேயே இருநூறிற்கும் மேற்பட்ட பேருரைகளை நிகழ்த்தி சாதனை புரிந்தார். இவ்வாறு விரிவுரைகளை நிகழ்த்தும்போது பல நாடுகளிலும் சிறப்பு பேராசிரியராகத் தமிழ்ப்பாடமும் நடத்தியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்தபோது அங்குள்ள நூலகங்களில் பல தமிழ் கையெழுத்துப் பிரதிநூல்கள், மற்றும் அச்சிடப் பெற்ற தமிழ் நூல்களப்பற்றி ஆராய்ந்தார். இதன் பெறுபேறாக 1556 ஆம் ஆண்டில் தமிழில் அச்சிடப் பெற்ற Luso-Tamil Catechism (போர்த்துக்கேய-தமிழ் மொழியில் கிறிஸ்தவம் சார்ந்த கேள்விக் கொத்து) "காட்டில்கா" எனப்பெயரிடப்பட்டு வெளியிடப்பட்டது.

இதனை அடிகளார் 1950 ஆம் ஆண்டில் லிஸ்பனில் கண்டெடுத்தார். அத்துடன் 1578 இல் அச்சிடப் பெற்ற தம்பிரான் வணக்கம், 1579 இல் வெளியிடப்பட்ட "கிறித்தியானி வணக்கம்" . முதன்முதலாக அன்றம்டீபெ றோனீக்கா என்பவரால் தொகுக்கப் பட்ட தமிழ் - போர்த்துக்கேய மொழி அகராதி போன்றவற்றையும் கண்டெடுத்தார். அதில் பெறொனிக்கா அகராதியினை மீள்பதிப்பு செய்து அதனை முதல் தமிழாராச்சி மகாநாட்டில் மலேசியாவில் வெளியிட்டார்.

தனிநாயகம் அடிகளார் போர்த்து கலில் கண்டறிந்த Arte da Lingua Malabar என்ற கையேடே தமிழுக்காக அயலவர் எழுதிய முதல் இலக்கணக்கையேடு ஆகும். தாளில் எழுதப்பட்ட இந்தக் கையேடு என்றீக்கு அடிகளால் 1549 இல் வழங்கிய போர்த்துக்கேய மொழியில் அக்காலத்துத் தமிழ்மொழியைவிளக்குகிறது. இந்தக் கையேட்டை டஜீன்ஹைன் என்ற அமெரிக்கர் 2013 ஏப்ரலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1963 ஆம் ஆண்டளவில் தமிழக அரசில் எம். பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்த போது தமிழக அரசின் தமிழ்வளர்ச்சிக் கழகத்தில் தனிநாயகம் அடிகளார் உலகநாடுகளில் உள்ள தமிழறிஞர்கள் யாவரையும் ஒன்று திரட்டி ஒரு குழுவாக அமைத்து தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் தமிழாராய்ச்சி மகாநாட்டினை நடத்தும் யோசனையை முன்வைத்தார்.

இதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையினையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை. இதனை அடுத்து இம் மாநாட்டினைத் தாமே முன்னின்று உலகளவிலே நடத்த வேண்டும் என்ற உத்வேகம் கொண்டதனால் உலகத்தமிழ் ஆராய்ச்சிக்கழகம் உருவாக வழிபிறந்தது.

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின (International Association for Tamil Research, IATR) முதல் கூட்டம் டில்லியில் 1964 ஜனவரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தனிநாயகம் அடிகளாருடன் பேராசிரியர் கமில் சுவெலபில், தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வ.ஐ.சுப்பிரமணியம் ஆகியோர் அழைப்பாளர்களாக இருந்து செயற்பட்டனர்.

மொத்தம் 26 தமிழறிஞரகள் சேர்ந்து உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1964 ஜனவரி மாதம் 7 ஆம் நாள் ஆரம்பித்து வைத்தனர். தனிநாயகம் அடிகள் அந்த அமைப்பின் இணைச் செயலாளராக தேர்வுசெய்யப்பட்டார்.

அடிகளார்உயிருடன் இருந்த காலப்பகுதியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நான்கு மகாநாடுகளை நடத்தியது. இவர்பொதுச் செயலாளராகவிருந்து முதல் மகாநாட்டினை 1966 ஏப்ரல் 16 - 23 திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத்தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினர்.

1961 ஆண்டில்அவர் மலாய்பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறைத்தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றியது மிகவும் துணைநின்றது. அப்போது அமைச்சர்களாக இருந்த வி. தி.சம்பந்தன், வி.மாணிக்கவாசகம் ஆகியோருடன் அடிகளார் பேணிய நல்லுறவால் மலேசிய அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றது.

மாநாட்டிற்கு மலேசியப் பிரதமர் துங்கு அப்துல்ரகுமான் தலைமை தாங்கினார். தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். பக்தவத்சலமும் கலந்து சிறப்பித்தார். புரோயென்காவின் போர்த்துக்கேய-தமிழ்அகராதியை அங்கு மீள்பதிவாக்கம் செய்து இம்மாநாட்டில் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டார். சென்னையில் நடந்த இரண்டாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் முதன்மை விருந்தினராகக்கலந்து கொண்டார்.

அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்னர் ஏப்ரல் 1980 இல் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மேமாதம் வேலணையில் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் எழுதிய தமிழ்மறை விருந்து என்ற நூல்வெளியீட்டு விழாவில் பங்கேற்றார்.அதன்பின் பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார் 1980 செப்டம்பர் 1 மாலை 6.30 மணியளவில் உயிர்நீத்தார்.

1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடிகளாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவரது சிலை ஒன்றும் தமிழகக்கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவரின் இறப்புக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

நெடுந்தீவு மக்கள் தமது மண்ணின் மைந்தனாகிய தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர்.

1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனிநாயக அடிகளின் தமிழ்ச்சேவையினை நினைவு கூர்ந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன் துணை வேந்தராகப் பணியாற்றியபோது அவருக்கு இறப்புக்குப் பின்னரான கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

சென்னையில் 2013 பெப்ரவரி 16 அன்று தனிநாயக அடிகளாரின் நினைவை போற்றும் வகையில் நூற்றாண்டு தொடக்கவிழா நடைபெற்றது.

தமிழின் தூதுவர் அல்லது அம்பாசிடர் ஒப் தமிழ் என்பது 2013 இல்வெளி வந்த தமிழ் ஆங்கில ஆவண நிகழ்படம் ஆகும். இது சேவியர் தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கையையும் அவர் தமிழுக்கு ஆற்றியபணிகளையும் ஆவணப் படுத்துகிறது. இதனை செந்தில் வீனு இயக்கி உள்ளார்.

**அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவதில் ஏற்பட்ட தொய்வு**

முதலில் நடைபெற்ற 4 மாநாடுகள் தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் நடைபெற்றவை. அவரது மறைவுக்குப் பிறகு 5ஆவது மாநாட்டைத் தொடர்ந்து நடத்தப் போதிய வசதியில்லாமல் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் வேகம் குறையைத் தொடங்கியது.

பிறநாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வரும் தமிழறிஞர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாததே இதற்குக் காரணமாகும். ஐந்தாவது மாநாடு 8 ஆண்டுகளுக்குப் பிறகு 1981ஆம் ஆண்டு ஜனவரி 4-10 இல் மதுரையில் நடத்தப்பட்டது.

**ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு**

எம்.ஜி.ஆர். நடத்திய ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு மதுரையில். 1981 ஆம் ஆண்டு ஜனவரி4 ஆம் திகதி தொடங்கியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூரிய ஆயுதங்...

அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்யூஸ் வீதியை சேர்ந்த 25 வயதான முச்சக்கரவண்டி சாரதி, கொக்குவிலைச் சேர்ந்த 25 வயதான இளைஞன், யாழ்ப்பாண நகரத்தை சேர்ந்த 20 வயதான இளைஞன், குருநகரை சேர்ந்த 26 வயதான இளைஞன், வண்ணார்பண்ணையை சேர்ந்த 19 வயதான இளைஞன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணித்த முச்சக்கர வண்டிக்குள் இருந்து வாள், இரும்பு கம்பி, இரும்பு குழாய் என்பன மீட்கப்பட்டன. (ம-7)

## வட்டுக்கோட்டை...

கொண்ட விதம் குறித்து, விரிவான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இளைஞனின் மரணத்துடன் கடற்படையினருக்கும் தொடர்பு இருப்பதாக கொலை செய்யப்பட்டவரின் மனைவி குற்றம் சுமத்தியிருந்த நிலையில் கடற்படையினரின் முன்னிலையில் இளைஞன் தாக்கப்பட்டு கடத்தப்படுகின்ற சி.சி.ரிவி காணொளிக் காட்சிகள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன.

தற்போது வெளியாகியுள்ள வீடியோ காட்சியில் பல அதிர்ச்சி தரும் விடயங்கள் பதிவாகியுள்ளன. இந்நிலையில் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது கடற்படையினர் ஏதேனும் தவறு செய்திருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த மார்ச் 11ஆம் திகதி, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொன்னாலை கடற்படை முகாமிற்கு அருகில் ஒரு தம்பதியினர் கொடூரமாக தாக்கி கடத்திச் செல்லப்பட்ட நிலையில், கணவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இதன்போது குறித்த தம்பதியினர் பாதுகாப்பு தேடி கடற்படை முகாமுக்குள் சென்றவேளை அவர்களை கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர்.

அத்துடன் வன்முறைக்குழு வினரால் இளைஞன் கடத்தப்படும்போது கடற்புடையினர் அதனை தடுக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ம-7)

## நவக்கிரியில்...

கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை பெற்றோல் குண்டு வீசி தீயிட்டு எரித்து வீட்டில் ஜன்னல்கள் கதவுகள் என்பவற்றையும் கூரிய ஆயுதங்களால் உடைத்து சேதமாக்கியுள்ளனர்.

வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்தவேளை கூரிய ஆயுதங்களுடன் வந்த மூவர் தமது வீட்டை உடைத்து மோட்டார் சைக்கிளையும் தீயிட்டு எரித்ததாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## மனித உரிமை...

உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி மலை ஆலயத்தில் வைத்து கைதான ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரில் 5 பேர் தொடர்ந்தும் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியா மனிதவுரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது, தமக்கான நீதியை வலியுறுத்தி ஆலய பூசகர் உள்ளிட்ட 5 பேர் நேற்றும் 4ஆவது நாளாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக அவர்களது உடல்நிலை குறித்து இதுவரையில் எந்தவித செயற்பாடுகளையும் மனித உரிமை ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தனர்.

இதன்போது, மனிதவுரிமை ஆணைக்குழுவினர் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்களிடம் இருந்து முறைப்பாடுகளையும் பெற்றுக் கொண்டனர். அத்துடன் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலைக்கு சென்று பார்வையிடுவதாகவும் இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட உறவினர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் மனிதவுரிமை ஆணைக்குழு அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## வெடுக்குநாறி...

கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக வட- கிழக்கு மக்களை அணிதிரளுமாறு வேலன் சுவாமிகள் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த மகாசிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த ஆலயத்தின் நிர்வாகிகள் மீதும், சிவ பக்தர்கள் மீதும் பொலிஸார் நடத்திய வன்முறைகளை எதிர்த்தும், கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கக்கோரியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக குறித்த .போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், அனைத்துத் தமிழ் மக்கள், சமயம் சார்ந்த அமைப்புக்கள், தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் உணர்வாளர்கள், சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரையும், கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,250)

## முயற்சி...

கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் டக்ளஸ் சோனெக் இ.சொனெக் தெரிவித்துள்ளார்.

யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் நேற்று ஊடகங்களை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நாம் விஜயம் மேற்கொண்டுள்ளோம். இன்று (நேற்று) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளோம். இந்நிலையில், இங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியிருந்தோம்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் தாம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக யாழ் மக்கள் தெரிவித்தனர். இளைஞர்-யுவதிகள் வேலைவாய்ப்பு இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதையும் வெளிப்படுத்தினர்.

இவ்வாறான விடயங்களை நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். அதற்கேற்ப பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். வடக்கு கிழக்கில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதோடு, உள்ளூர் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களை அதிகரிக்க அமெரிக்கா நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது" இவ்வாறு அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் தெரிவித்துள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி - 2024.03.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1450
K 20 39 48 71 K
28361

மஹஜன சம்பத
திகதி 2024/03/15
சீட்டிழுப்பு இலக்கம் 5420
R 4 0 3 9 9 1

மெகா பவர்
திகதி 15/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1768
K 15 27 44 50 62
32684

லக்கி 7 VIP
திகதி 2024.03.15
சீட்டிழுப்பு இலக்கம் 0246
K 5 1 3 6 0 7 K

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3662
சீட்டிழுப்பு திகதி 15.03.2024
A 12 42 62 70
A 04119

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.15
சீட்டிழுப்பு இலக்கம் 0729
கும்பம் 43 47 52 57 கும்பம்
30920 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.03.2024 வெற்றி வாரம் 128
E 5 6 6 0 7 2
ரூ. 31,206,484.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2394
சீட்டிழுப்பு திகதி 15.03.2024 தினம் வெள்ளி
22 44 61 74 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,377,880.00

சனிதா
திகதி 2024.03.15 வெற்றி வாரம் 4555
23 25 35 38 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,082,924.00

சசிறி
வெற்றி வாரம் 454
சீட்டிழுப்பு திகதி 2024.03.15
08 46 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,280,240/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4106 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.15 தினம் வெள்ளிக்கிழமை
10 55 57 62 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 11,740,831.60

கப்றுக
1570
15.03.2024 வெள்ளி
R 18 07 59 67 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 512,036,142.20

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2220
சீட்டிழுப்பு திகதி : 2024.03.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.99,140,960/-
31 34 41 68 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு பொதுச் சந்தையில் கழிவு சேகரிப்பு மையம் உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தினால் தரம் பிரித்து பெற்றுக் கொள்வதற்காக சேகரிப்பு மையமொன்று நயினாதீவு பொதுச் சந்தையில் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த கழிவு சேகரிப்பு மையத்தினூடாக வார நாட்களில் காலை 8 மணிமுதல்மாலை 4 மணி வரை திண்மக்கழிவுகளினை கையளிக்க முடியும் என்பதுடன் தரம் பிரிக்கப்படாத கழிவுகள் ஏற்றுக் கொள்ளப்படாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7)


## மணமகள் தேவை

மிருகசீரிடம் 3 ஆம் பாதம்
1990 இல் பிறந்த இந்து,
முகாமைத்துவ + பட்டயக்
கணக்காளர் மணமகனுக்கு
பொருத்தமான மணமகள்
உள்நாட்டில் தேவை.

**076 641 8271** (094)



## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா
ஆலோசனை மற்றும் வங்கி
மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (097)

**074 17 37 684**



## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/= (19118)

தொடர்புகளுக்கு

**077 544 8503**



## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும்
அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும்
இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777 (C-8538)



## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-8538)



# காணி விற்பனைக்கு உண்டு

## நெல்லியடி நகரத்தில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
- விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : 071 173 3911, 076 853 5022** (099)



## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின்
கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 263 /= | |
| 1 Kg அரிசி மா | - | 199 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 188 /= | |
| 1 Kg றவை | - | 290 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 288 /= | |
| 1 Kg சம்பா | - | 230 /= | |
| 10 Kg விஜிதா நாடு | - | 1940 /= | |
| 180 ml Chik சம்போ | - | 390 /= | ~~480/=~~ |
| 300 g நெஸ்டமோல்ட் | - | 580 /= | ~~620/=~~ |
| 1 Kg Sunny சலவைதூள் | - | 290/= | ~~380/=~~ |
| 750 ml New VSP நல்லெண்ணை | - | 1455 /= | ~~1550/=~~ |
| 180 g Protinex | - | 1799 /= | ~~2000/=~~ |
| 01 Sunlight சவர்க்காரம் | - | 140 /= | ~~150/=~~ |
| 400 g Anlene அன்லீன் | - | 1259 /= | ~~1350/=~~ |

450/=



~~930/=~~

1060/=



~~1110/=~~
(Max 02)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (098)

Happy Supermarket
0777 8080 30


# 26 வயதுடைய பெண் கழுத்தறுத்து படுகொலை

(கொழும்பு)

சீதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முத்துவாடிய பகுதியில் வாடகை அறையொன்றில் பெண் ஒருவரின் சடலம் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த பெண் பலுகொல்லாகம, மெகொடவெவ பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடையவர் எனவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இரண்டு குழந்தைகளுக்கு தாயான இவர், முதல் திருமணத்தில் இருந்து பிரிந்து தனது 22 வயதுடைய இரண்டாவது கணவருடன் வாடகை அறையில் வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இந்த கொலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் இரண்டாவது கணவரே இக்கொலையை செய்துள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் அறைக்கு வந்தபோது வேறு ஒரு ஆணின் பணப்பை இருந்ததாகவும், அதனால் இருவருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு போத்தல் மூடியால் பெண்ணின் கழுத்தை அறுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தற்போது பிரதேசத்தை விட்டு தப்பிச்சென்றுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

(ம-7)


## மணமகள் தேவை

இலண்டனில் வதியும் (PR இல்லாத) 1989 ஆம்
ஆண்டு ரேவதி நட்சத்திரத்தில் (2 ஆம் பாதம்)
பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் PR
உள்ள மணமகள் தேவை.

**தொடர்பு - 077 032 9106**



## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK20 நீர் இறைக்கும் இயந்திரம் (water pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகிறோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருள்ளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்" (091)

ஆர்க் . என் : கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020



Hotline : 071 535 7799/ 071 973 9917



## மணப்பெண் தேவை

- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1975, விசாகம், MSc, own Business, Uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 25104
- யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், 1984, சுவாதி, BSc, Business Management, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 31799
- மீசாலை, இந்து, கௌரவகுலம், 1988, சதயம், MSc in Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 29216
- பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1979, அச்சுவினி, BSc(Jaffna), MSc(uk) own Business, UK citizen vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 32669
- பண்டத்தரிப்பு, இந்து, கௌரவகுலம், 1985, பரணி, O/L, Receptionist(Hospital) Germany citizen, vegetarian, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 33104
- திருகோணமலை, இந்து, கௌரவகுலம், 1984, ரேவதி, qualified Draftsman, vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 33001
- கரம்பன் - Jaffna Town, இந்து, கௌரவகுலம், 1988, ரோகிணி, BSc Engineering, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28033
- உரும்பிராய் - இணுவில், இந்து, கௌரவகுலம், 1991, பூரம், Network Engineer, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 29309
- மீசாலை, இந்து, கௌரவகுலம், 1988, சதயம், BSc Engineer, Uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 29216

(100)

www.thaalee.com | ✆- 077 539 3728 | - 077 803 8193


## யாழி...

உறவுகள் வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்கக் கோரி அவர்களின் உறவுகள் இன்று காலை 10 மணியளவில் வவுனியாவில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இந் நிலையில், அவர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக இன்று காலை 07.30 மணிக்கு யாழ். நல்லூர் ஆலய முன்றலில் இருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றார்.

(ம-7)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org